டி.என்.பி.எஸ்.சி. தலைவராக எஸ்.கே.பிரபாகர் நியமனம்

சென்னை, ஆக.14– டி.என்.பி.எஸ்.சி. தலைவராக மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.கே. பிரபாகர் நியமித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழக அரசின் பல்வேறு நிலைகளில் உள்ள அரசு பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்யும் பணியை டி.என்.பி.எஸ்.சி. என்ற தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மேற்கொண்டு வருகிறது. காலியாகும் பணியிடங்களுக்கு தகுதியானவர்களை தேர்வு செய்யும் முகமையாக இந்த தேர்வாணையம் செயல்பட்டு வருகிறது.

டி.என்.பி.எஸ்.சி.க்கு ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். அரசின் பரிந்துரையின் அடிப்படையில், அதற்கான உத்தரவை கவர்னர் பிறப்பிப்பார்.

அதன் தலைவராக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி பாலச்சந்திரன் கடந்த 2022 ம் ஆண்டு ஜூன் மாதம் ஓய்வு பெற்றார். அதைத்தொடர்ந்து ஓய்வு பெற்ற போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திர பாபுவை டி.என்.பி.எஸ்.சி.யின் தலைவராக நியமித்து உத்தரவிடும்படி கவர்னர் ஆர்.என்.ரவிக்கு தமிழக அரசு பரிந்துரைத்தது. ஆனால் அதை ஏற்க கவர்னர் மறுத்துவிட்டார்.

அதைத்தொடர்ந்து டி.என்.பி.எஸ்.சி.யின் உறுப்பினர்களில் ஒருவரான ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சி.முனியநாதனை பொறுப்பு தலைவராக அரசு நியமித்து உத்தரவிட்டது. தற்போது டி.என்.பி.எஸ்.சி.க்கு 9 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

இந்த நிலையில் டி.என்.பி.எஸ்.சி.யின் தலைவராக, வருவாய் நிர்வாக ஆணையராக இருக்கும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.கே.பிரபாகரை நியமித்து தமிழக அரசு நேற்று உத்தரவிட்டது. இதற்கான அரசாணையை மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் நந்தகுமார் வெளியிட்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்தவர்

அதில், டி.என்.பி.எஸ்.சி.யின் தலைவராக, எஸ்.கே.பிரபாகர் பதவியேற்கும் நாளில் இருந்து 6 ஆண்டுகள் வரை அல்லது அவர் தனது 62 வயதை எட்டும் வரை நீடிப்பார் என்று கூறப்பட்டுள்ளது. அதற்கான ஒப்புதலை கவர்னர் வழங்கியுள்ளார்.

எஸ்.கே.பிரபாகர் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை புளியம்பட்டியை சேர்ந்தவர். கடந்த 1966ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதி பிறந்தார். பி.இ. (எலக்ட்ரிக்கல்), டெல்லி ஐ.ஐ.டியில் எம்.டெக், பட்டங்கள் படித்தவர் எஸ்.கே.பிரபாகர். எம்.பி.ஏ. (நிதி மேலாண்மை), எம்.ஏ (பொருளாதாரம்) பட்டங்களையும் பெற்றுள்ளார். அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலும் அவர் படித்துள்ளார். தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகள் அவருக்கு தெரியும்.

1989ம் ஆண்டு ஐ.ஏ.எஸ் அதிகாரியாக தமிழகத்தில் பணியில் சேர்ந்தார். முதலமைச்சராக கருணாநிதி இருந்தபோது முதலமைச்சரின் செயலாளராக பணியாற்றினார். மேலும், தகவல் தொழில்நுட்பத் துறை, வணிகவரித் துறை, பொதுப்பணித் துறை, உள்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

2019ம் ஆண்டு அவர் கூடுதல் தலைமைச் செயலாளராக அந்தஸ்து நிலை உயர்வைப் பெற்றார். இந்த ஆட்சியில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்ட எஸ்.கே.பிரபாகர், பின்னர் வருவாய் நிர்வாக ஆணையராக இடமாற்றம் செய்யப்பட்டார்.

ஓய்வு பெற 17 மாதங்கள் உள்ள நிலையில் எஸ்.கே.பிரபாகர், தற்போது டி.என்.பி.எஸ்.சி. தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சமூக வலைதளங்களில் பொய்யான வீடியோக்கள் பரப்புவது சட்டப்படி குற்றம்: தமிழக அரசு எச்சரிக்கை

சென்னை, ஆக.14– மாணவர்களின் அடையாளங்களை மறைக்காமல் சமூக வலைதளங்களில் வீடியோக்கள் பரப்புவது சட்டப்படி குற்றம் என்று தமிழக அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழக அரசு அனைத்து மக்களும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக நிதி உதவி வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக பெண்களுக்கு மாதம் தோறும் கலைஞர் உரிமைத்தொகை மூலம் ரூ.1,000ம், அரசு பள்ளியில் படித்த மாணவிக்கு, கல்லூரி படிப்பின்போது மாதம் ரூ.1,000ம் வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கும் தவப்புதல்வன் திட்டம் ஆகியவற்றை செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டங்களால் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்படுகிறது என்று தமிழக அரசு கூறுகிறது. ஆனால் இந்த திட்டங்களால் மக்களுக்கு எந்த பயனும் இல்லை. தமிழகத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் கேள்வி குறியாகி விட்டது. இந்த நிதி உதவியால் மக்களின் வாழ்க்கை தரம் உயரவில்லை.

இதுபோன்ற உதவித்தொகை வழங்கும் திட்டம் தொடங்கியதில் இருந்தே டாஸ்மாக் வருமானம்தான் அதிகரித்து உள்ளது. அரசின் பணம், அரசுக்குதான் செல்கிறது என்று சமூக வலைதளங்களில் தொடர்ந்து சிலர் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதற்கு வலுசேர்க்கும் வகையில் சிலர் பெண்கள் மற்றும் மாணவர்கள் மதுகுடிக்கும் வீடியோக்களை பரவவிடுகின்றனர்.

இந்த நிலையில் தமிழக அரசு சமூக வலைதளங்களில் பரவும் பொய்யான தகவல்களை வெட்ட வெளிச்சமாக்க வாட்ஸ்அப்பில் TNFACT CHECK என்ற ஒரு சேனலை தொடங்கி உள்ளது. அதில் தவறான தகவல்கள் குறித்து அதற்கு அரசின் விளக்கமும் பதிவிடப்படுகிறது. அந்த வகையில் பஸ்சில் போட்டி போட்டு கொண்டு பீர் குடிக்கும் மாணவிகள், மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்து டாஸ்மாக் மூலம் மீண்டும் வாங்கும் அரசு என்று ஒரு வீடியோவுடன் சமூகவலைத்தளத்தில் பரவிய பதிவுகளுக்கு தமிழக அரசு எச்சரிக்கை பதிவு வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:–

இந்த வீடியோ கடந்த 2022ம் ஆண்டு மார்ச் மாதம் செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் அருகே எடுக்கப்பட்டது. ஆனால் 2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்ட புதுமைப்பெண் திட்டம் கல்லூரி மாணவிகளுக்கானது. பள்ளி மாணவிகளுக்கு அல்ல. மேலும் இந்த வீடியோ வெளியான போதே, பள்ளிக்கல்வித்துறை மற்றும் குழந்தைகள் நல அலுவலர்கள் தரப்பில் மாணவிகளுக்கு மன நல ஆலோசனை வழங்கப்பட்டது. மாணவர்களின் அடையாளங்களை மறைக்காமல் பழைய வீடியோவை சமூகவலைதளங்களில் பரப்புவது சட்டப்படி குற்றமாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், திருவையாறு நகராட்சிகளாக தரம் உயர்வு

சென்னை, ஆக.14– ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், திருவையாறு ஆகிய பேரூராட்சிகளை நகராட்சிகளாக தரம் உயர்த்த தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழக நகராட்சி நிர்வாகத்துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், திருவையாறு உள்ளிட்ட சில பேரூராட்சிகள், நகராட்சிகளாக தரம் உயர்த்தப்படும் என்று சட்டசபையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்திருந்தார்.

அதன்படி, பல்வேறு காரணங்கள் அடிப்படையில், ஸ்ரீபெரும்புதூர், மாமல்லபுரம், திருவையாறு பேரூராட்சிகளை 2ம் நிலை பேரூராட்சிகளாக தரம் உயர்த்தலாம் என நகராட்சி நிர்வாக இயக்குனர் அரசுக்கு பரிந்துரைத்தார். இதுதொடர்பான கருத்துருக்களை பரிசீலித்த தமிழக அரசு, காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர், செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம், தஞ்சை மாவட்டம் திருவையாறு ஆகிய 3 பேரூராட்சிகளை, நகராட்சிகளாக அமைத்து உருவாக்குவதற்கான உத்தேச முடிவு செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது. உத்தேச நகராட்சிகளின் வார்டுகள் எல்லைகளை வரையறை செய்து, நகராட்சிகளுக்கான அடுத்த சாதாரண தேர்தல் நடத்தப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்த

3 மின் திட்ட கொள்கை: 50 சதவீத பசுமை மின் உற்பத்தி என்ற இலக்கை அடையும்

சென்னை, ஆக 14. தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்த 3 மின் திட்ட கொள்கைகளால் 50 சதவீத பசுமை மின் உற்பத்தி என்ற உயரிய இலக்கை அடையும் என்று அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த அமைச்சரவை கூட்டத்தில் நீரேற்று புனல் மின் திட்டங்கள் கொள்கை, சிறிய புனல் மின் திட்ட கொள்கை, காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான புதுப்பித்த மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை ஆகிய கொள்கைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

நீரேற்று புனல் மின் திட்டங்கள் கொள்கை என்பது, மின்சாரத்தை சேமிக்கும் மின் நிலையங்களைப் பற்றியதாகும். பகலில், சூரிய மின்சக்தி உற்பத்தி நேரங்களில், நீரை உயரத்தில் உள்ள நீர்த்தேக்கத்திற்கு ஏற்றம் செய்து மின்சார ஆற்றலை சேமிக்கின்றன. இரவு நேரங்களில், மின்சார தேவை அதிகமாக இருக்கும்போது, சேமித்து வைக்கப்பட்ட நீரானது டர்பைன்கள் வழியாக விடப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் வரும் 2030ம் ஆண்டில் 20 ஆயிரம் மெகா வாட் சூரிய மின்உற்பத்தி நிலையம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், சூரிய மின் நிலையங்களில் உற்பத்தியாக உள்ள அதிகப்படியான பசுமை எரிசக்தியை சமப்படுத்தி, மின் கட்டமைப்பில் மின்சாரமாக மாற்றி பயன்படுத்துவதற்கு நீரேற்று புனல் மின் திட்டங்கள் கொள்கை வழிவகுக்கும்.

சிறிய புனல் மின் திட்ட கொள்கை என்பது 100 கிலோ வாட் முதல் 10 மெகாவாட் வரை மின் உற்பத்தி திறன் கொண்ட சிறிய அளவிலான நீர்மின் நிலையங்கள் ஆகும். இந்த கொள்கையின் வாயிலாக, தனியார் நிறுவனங்கள், சுற்றுச்சூழலுக்கு அதிகம் பாதிப்பில்லாமல் மின்சாரத்தை உற்பத்தி செய்து, சொந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்த ஊக்குவிக்கப்படும்.

கரியமில வாயு வெளியேற்றத்தை குறைத்து, புதுப்பிக்கத்தக்க மற்றும் மாசற்ற தூய்மையான மின்சார வளத்தை உருவாக்க இயலும். நிலையான எரிசக்தி இருப்பை உறுதி செய்ய, குறைந்து வரும் மரபுசார் எரிபொருளான நிலக்கரி, எரிவாயு போன்ற இருப்புகளை சார்ந்திருப்பதை தவிர்க்கலாம். இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரத்தில் 10 சதவீதம் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு இலவசமாக வழங்கப்படும்.

காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களுக்கான புதுப்பித்த மற்றும் ஆயுள் நீட்டிப்பு கொள்கை யின் மூலம், குறைந்த திறன் கொண்ட பழைய காற்றாலை களின் மின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் காற்றாலைகளை புனரமைத்தல், புதுப்பித்தல் மற்றும் ஆயுள் நீட்டிப்பு ஆகிய 3 வழிகள் அனுமதிக்கப்படுகிறது. தமிழ்நாட்டின் காற்றாலை மின் உற்பத்தி மேலும் 25 சதவீதம் அதிகரிக்க இந்த கொள்கை வழிவகுக்கும்.

இந்த 3 கொள்கைகள் மூலமாக, தமிழகத்தின் மாசற்ற, பசுமை எரிசக்தி அதிகரிக்கப்படுவதுடன் முதலமைச்சர் நிர்ணயம் செய்துள்ள 2030ம் ஆண்டில் தமிழ்நாட்டின் மின் கட்டமைப்பில் 50 சதவீத பசுமை மின் உற்பத்தி என்ற உயரிய இலக்கை அடைய முடியும்.

இந்த தகவலை தமிழக அரசு தெரிவித்துள்ளது.

முதலாம் ஆண்டு என்ஜினீயரிங் வகுப்பு: அடுத்த மாதம் 2–ந்தேதி ஆரம்பம்

சென்னை, ஆக.14– அண்ணா பல்கலைக்கழக வளாக கல்லூரிகளான கிண்டி, எம்.ஐ.டி, அழகப்பா, எஸ்.ஏ.பி. ஆகியவற்றில் பி.இ, பி.டெக் (முழு நேரம்), பி.பிளான் (முழு நேரம்), எம்.எஸ்சி (5 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்பு) படிப்புகளுக்கு அடுத்த மாதம் 2ம் தேதி முதல் வகுப்புகள் தொடங்கும். இவர்களுக்கான கடைசி வேலை நாட்கள் டிசம்பர் 13ம் தேதி ஆகும். செமஸ்டர் தேர்வுகளை டிசம்பர் 23ம் தேதிக்குள் முடிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி.ஆர்க் (முழு நேரம்) படிப்புக்கு அடுத்த மாதம் 18ம் தேதி முதல் வகுப்பு ஆரம்பிக்கும். டிசம்பர் 24ம் தேதி கடைசி வேலை நாள். அதே மாதம் 30ம் தேதிக்குள் செமஸ்டர் தேர்வை முடிக்க வேண்டும். இவர்களுக்கு அடுத்த செமஸ்டருக்கான வகுப்புகள் அடுத்த ஆண்டு (2025) ஜனவரி 20ம் தேதி தொடங்கும் என அண்ணா பல்கலைக்கழகம் கூறியுள்ளது.

பிவிபி வென்சர்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : கதவு எண்.2, 9வது தளம், கேஆர்எம் மையம், ஹாரிங்டன் ரோடு, சேத்பட்டு, சென்னை 600 031.
Web: www.pvpglobal.com; Email: investorrelations@pvpglobal.com;
Tel: 044 30285570 | CIN:L72300TN1991PLC20122

30 ஜூன் 2024ல் முடிந்த காலாண்டுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(செபி பட்டியல் கட்டுப்பாடுகள் 2015–ன் விதி 33ன்படி செய்தித்தாளில் வெளியிடுவதற்கான முறைப்படி)

(ரூ. லட்சத்தில்)

வ. எண்.	விவரங்கள்	தனியானது			ஒருங்கிணைந்தது		
		30.06.2024 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது	30.06.2023 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது	31.03.2024 முடிந்த ஆண்டு தணிக்கை செய்தது	30.06.2024 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது	30.06.2023 முடிந்த காலாண்டு தணிக்கை செய்யாதது	31.03.2024 முடிந்த ஆண்டு தணிக்கை செய்தது
1	செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்)	261.05	2.92	753.63	515.41	48.50	1,666.25
2	காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	(184.00)	(381.39)	(878.65)	(270.55)	(395.70)	(1,090.50)
3	வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(184.00)	(381.39)	2,771.63	(270.55)	(395.70)	6,157.70
4	வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(138.64)	(381.39)	3,239.40	(225.19)	(395.70)	6,653.98
5	காலத்திற்கான மொத்த இதர விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது)	(156.24)	(381.39)	3,014.10	(242.79)	(395.70)	6,431.42
6	சமபங்கு மூலதனம் (ஒன்றின் முகமதிப்பு ரூ. 10)	26,040.37	24,750.37	26,040.37	26,040.37	24,641.35	26,040.37
7	பங்கு ஒன்றுக்கான சம்பாத்தியம் (வருடாந்திரமல்ல) ஒன்று ரூ.10/–						
	அடிப்படை	(0.05)	(0.15)	1.28	(0.09)	(0.16)	2.62
	டைலூட்டட்	(0.05)	(0.15)	1.28	(0.09)	(0.16)	2.62

குறிப்பு:

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு ஆகஸ்ட் 12, 2024 அன்று நடந்த குழு கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அன்றைய தினம் நடந்த இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன. மேற்கண்ட காலாண்டு முடிவுகளை சட்ட தணிக்கையாளர்கள் மறுஆய்வு செய்தனர்.
2. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்ட 30 ஜூன் 2024ல் முடிந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகள் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.pvpglobal.com–ல் உள்ளது.

இயக்குனர்கள் குழுவின் சார்பாக
ஒப்பம்/–
பிரசாத் வி. பொட்லூரி
சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குனர்

இடம் : ஹைதராபாத்
தேதி : ஆகஸ்ட் 12, 2024

ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

பதிவு அலுவலகம் : 501, சல்கான் ஆரம், ஜசோலா மாவட்ட மையம், புதுடெல்லி –110025
CIN : U65900DL2020PLC366027

ஏல அறிவிப்பு

வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அறிவிப்புகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் மற்றும் அறிவிப்புகள் அனுப்பியபோதிலும், வங்கியிடமிருந்து பெற்ற தங்க நகை கடன்/கள் அவர்களால் சரி செய்யப்படவில்லை என்பதை ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கடன்தாரர்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். வங்கியில் செக்யூரிட்டியாக வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை ஏலம் விட முடிவு செய்யப்பட்டுள்ளது, அதன்படி 28.08.2024 அன்று மாலை 03:00 மணிக்கு கடன் பெற்ற கிளை வளாகத்தில் ஏலம் விடப்படும் என்று அனைத்து கடன்தாரர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் வாங்கியவர்கள், கணக்கு வைத்திருப்பவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைவரும் இந்த ஏலத்தில் பங்கேற்கலாம்.

கிளை	கணக்கு எண்	கணக்கு வைத்திருப்பவர் பெயர்	தந்தை/ மனைவி பெயர்	முகவரி	கணக்கு துவக்க தேதி	செலுத்த வேண்டிய தொகை
சென்னை	101042519284	பிரசாந்த் ஸ்ரீதர்	த/பெ. ஸ்ரீதர் கே ஆர்	கே ஆர் 11, மலோனி சாலை, தி. நகர், தமிழ்நாடு 600 017	08-12-2023	317548.04

ஏல தேதி 28.08.2024 அன்று மாலை 03.00 மணி

எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி ஏலத்தில் இருந்து எந்தவொரு கணக்கையும் நீக்க அல்லது ஏலத்தை ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஷிவாலிக் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்.

ஜிடபிள்யுஎல் புராபர்டீஸ் லிமிடெட்

CIN : U19129TN1964PL0000749
பதிவு அலுவலகம்: எண்.43, தர்கா சாலை, பல்லாவரம், சென்னை 600 043. போன் : 22660984 E-mail : Cosecgwl@jumbo.net.in

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள கம்பெனியின் உறுப்பினர்களுக்கான **99வது வருடாந்திர பொதுக்கூட்டம் வியாழக்கிழமை, 12 செப்டம்பர், 2024 அன்று காலை 11.30 மணிக்கு** சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீஸஸ் லிமிடெட் ("CDSL") வழங்கும் VC/ OAVM வசதி மூலம் நடைபெறும். கார்ப்பரேட் விவகார அமைச்சகம் 5 மே 2020 தேதியிட்ட சுற்றறிக்கை மற்றும் ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020, ஜனவரி 13, 2021, மே 05, 2022, டிசம்பர் 28, 2022 மற்றும் செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட சுற்றறிக்கையையின்படி (ஒட்டுமொத்தமாக எம்சிஏ சுற்றறிக்கைகள் என குறிப்பிடப்படும்) 2023–24 நிதியாண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு, கம்பெனி/டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு மின்னணு முறையில் மட்டுமே ஆகஸ்ட் 16, 2024 வெள்ளிக்கிழமை அன்று நிறுவனத்தால் அனுப்பப்படுகிறது. 2023–24 நிதி ஆண்டிற்கான ஆண்டறிக்கை CDSL இணையதளம்: www.evotingindia.com–ல் உள்ளது. அதிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 108, மற்றும் திருத்தப்பட்ட கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014–ன் விதி 20 ஆகியவற்றுக்கு இணங்க, வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் இடம் தவிர வேறு இடத்திலிருந்து மின்னணு வாக்குப்பதிவு (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) முறையைப் பயன்படுத்தி வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தீர்மானங்களிலும் வாக்களிப்பதற்கான வசதி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மின்னணு வாக்களிக்கும் வசதியை வழங்கும் நிறுவனமாக CDSL–ன் சேவைகளை கம்பெனி ஈடுபடுத்தியுள்ளது. கூடுதலாக, கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை மூலம் வாக்களிக்கும் வசதியையும் நிறுவனம் வழங்கும். வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பு/வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு குறித்த விரிவான செயல்முறைகள் அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

எம்சிஏ சுற்றறிக்கைகளின்படி, வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவை காகித வடிவில் எந்த உறுப்பினருக்கும் அனுப்பப்படமாட்டாது. இதுவரை அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை மின்னணு முறையில் பெறுவதற்கும் மற்றும் லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் ஆகியவற்றை பெறுவதற்கும் ஆகஸ்ட் 16, 2024 வெள்ளிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட நடைமுறைகளை பின்பற்றி மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியில் உறுப்பினராகி, கட்ஆப் தேதியில் அதாவது செப்டம்பர் 4, 2024 அன்று பங்குகளை வைத்திருப்பவர், helodesk.evoting@cdslindia.com–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம்:

இந்த அறிவிப்பில் முன்மொழியப்பட்ட தீர்மானங்கள் மீது மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான உள்நுழைவு ஆவணங்களை பெற வைப்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கான நடைமுறை:

1. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் – போலியோ எண், பங்குதாரர் பெயர், ஸ்கேன் செய்யப்பட்ட பங்கு சான்றிதழ் (முன் மற்றும் பின்புறம்), பான் (சுயசான்றொப்பமிடப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பான் கார்டு நகல்), ஆதார் (சுயசான்றொப்பமிடப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்ட ஆதார் கார்டு நகல்) உள்ளிட்ட தேவையான விவரங்களை கம்பெனியின் மின்னஞ்சல்/ஆர்டிஏ மின்னஞ்சல் sta@rnsaindia.com–க்கு அனுப்ப வேண்டும்.
2. மின்னணு பங்குதாரர்களுக்கு – உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணைப் உங்களின் அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளருடன் (DP) புதுப்பிக்கவும்.
3. தனிப்பட்ட மின்னணு பங்குதாரர்களுக்கு – உங்கள் மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்ணை உங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளருடன் (DP) புதுப்பிக்கவும். இது மின்னணுவாக்களிக்கும் போது மற்றும் டெபாசிட்டரி மூலம் மெய்நிகர் சந்திப்புகளில் சேரும் போது கட்டாயமாகும். உறுப்பினர்கள் VC/OAVM வசதி மூலம் மட்டுமே AGM–ல் கலந்துகொள்ளலாம் மற்றும் பங்கேற்கலாம், இது பற்றிய விவரங்கள் கூட்டத்தின் அறிவிப்பில் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி, நீங்கள் நேரடியாக 99வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும், பங்கேற்கவும் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதை தெளிவில் கொள்ளவும். உறுப்பினர்கள் VC/OAVM வசதி மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், VC/OAVM மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், கம்பெனிகள் சட்டம், 2013–ன் பிரிவு 103–ன் கீழ் குறைந்தபட்ச உறுப்பினர்களை கணக்கிடும் நோக்கத்திற்காக கணக்கிடப்படுவார்கள்.

4. உறுப்பினர்களுக்கு அறிவிப்பு யாதெனில்:

a) தொலைதூர மின்னணு வாக்களிப்பு **செப்டம்பர் 9, 2024 அன்று காலை 9.30 மணிக்கு துவங்கி (இந்திய நேரப்படி) செப்டம்பர் 11, 2024 அன்று மாலை 5.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** நிறைவு பெறும். இந்த காலக்கட்டத்தில் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொகுதி அதன் பிறகு CDSL–ஆல் முடக்கப்படும்.

b) கட் ஆப் தேதியான செப்டம்பர் 4, 2024 அன்று உறுப்பினர்கள் பதிவேடு/பலன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது மின்னணு வாக்களிப்பு வசதியை பெற முடியும்.

c) மின்னணு வாக்களிப்பதற்கான வசதி வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கிடைக்கும். மேலும் கூட்டத்திற்கு முன் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தில் மின்னணு வாக்களிப்புக்கான உரிமையைப் பயன்படுத்த முடியும். கூட்டத்திற்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பின் மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.

d) வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் மின்னணு வாக்களிப்பு முறையில் மின்னணு வாக்களிப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து www.evotingindia.com‌ல் உதவி பிரிவில் பயனர் கையேடு மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") பிரிவை பார்க்கவும் அல்லது helpdesk.evoting@cdslindia.com‌க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது க